# மேட்டுப்பாளையம் நகராட்சி

30 .04.2020ம் தேதி வியாழன்கிழமை மாலை மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

<table>
<tr><td>1</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை விநியோகம் செய்யும் பணிக்கு கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர்</th><th>தொகை ரூ. ஒன்றுக்கு</th></tr>
<tr><td>1</td><td>திருவாளர்.மனோ ஸ்டுடியோ, மேட்டுப்பாளையம்.</td><td>140/–</td></tr>
<tr><td>2</td><td>திருவாளர். மல்லீஸ் ஸ்டுடியோ, மேட்டுப்பாளையம்.</td><td>130/–</td></tr>
<tr><td>3</td><td>திருவாளர். கார்த்திக் போட்டோகிராபிக்ஸ், மேட்டுப்பாளையம்.</td><td>145/–</td></tr>
</table><br>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர். மல்லீஸ் ஸ்டுடியோ, மேட்டுப்பாளையம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு :<br>
1. அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண். சி1/1323/2020</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாதினசரி மார்க்கெட்டில் உள்ள கட்டண கழிப்பறையின் குத்தகை உரிமக்காலம் 30.09.2020 உடன் 3 ஆண்டு முடிவடைவதால் மீண்டும் 01.10.2020 முதல் ஓராண்டு தொகுப்பு மூன்றாண்டு காலத்திற்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல விளம்பர செலவினம் உத்தேசமாக ரூ.25,000/– ம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.1455/2020/அ1</td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சியின் 2019 –2020ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>
ந.க.எண். 1885/2020/அ3</td></tr>
<tr><td>4</td><td>பார்வை : நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் G.O (D) No.141 நாள்.23.04.2020<br><br>
“உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி , குடிநீர்க் கட்டணம் D & O கட்டணம் போன்றவை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீட்டிக்கப்படுகிறது’’ என உத்திரவிடப்பட்டு வரப்பெற்ற அரசாணை எண். G.O (D) No.141 நாள்.23.04.2020ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம்.<br>
ந.க.எண்.1481/2020/அ2</td></tr>
</table>

5 இந்நகராட்சியில் அனைத்து பிரிவுகளுக்கும் பிரிண்டர்களுக்கு தேவைப்படும் டோனர்கள் வாங்குவதற்கு கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | டோனர் பெயர் | Applied infotech Computer | Syscon Systems | Sri Hyagriya Systems |
|---|---|---|---|---|
| 1 | 55A Hp | 20150.00 | 19240/- | 19500/- |
| 2 | 205 S Samsung | 9200.00 | 8450/- | 8650/- |
| 3 | 88 A Hp | 12200.00 | 12169/- | 12900/- |
| 4 | 28 A Hp | 14890.00 | 14450/- | 15800/- |
| 5 | 78 A Hp | 11460.00 | 10350/- | 10650/- |
| 6 | Xerox Machine Mx237AT | 19300.00 | 18680/- | 19200/- |
| 7 | 12 A Hp | 12670.00 | 12200/- | 12400/- |
| 8 | TVS Dot Matrix Printer Ribbon | 655.00 | 420/- | 550/- |
| | மொத்தம் | 100525 | 95959 | 99650 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள SYSCON SYSTEMS நிறுவனத்திடமிருந்து டோனர்கள் வாங்கி கொள்ள அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.001619/2020/டி1**

6 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN40B 1483 டம்பர் பிளேசர் பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கு கடந்த 08.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ.2,14,500/– |
| 2 | முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ. 2,32,100/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 605/2020/எச்1

7 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN40P 1320 டிப்பர் லாரிக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கு கடந்த 08.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு | ரூ.1,49,300/– |
| 2 | முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ. 1,57,800/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 258/2020/எச்1

8 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்குத் தேவையான தள்ளுவண்டிகள் பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கு கடந்த 08.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நீலகிரி ஆட்டோ கேரேஜ் | ரூ.1,48,300/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர் | ரூ. 1,49,600/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் நீலகிரி ஆட்டோ கேரேஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 892/2020/எச்1

9 இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுத்திடும் வகையில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் (Containment Zone) சேகரமாகும் மருத்துவக்கழிவுகளை தமிழ்நாடு அரசு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வழிகாட்டுதலின்படி Tekno Therm, கோவை அவர்கள் மூலம் அகற்றுவதற்கான தோராய செலவினம் 5 மாதங்களுக்கு ரூ. 1.0 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1050/2020/எச்1

10 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016 நாள்.24.02.2016 மற்றும் 18.07.2016ன்படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண். எச்1/6219/2016, நாள்.21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/494/2019, நாள்.28.02.2019ல் மீண்டும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 28069/ஜே3/2018, நாள்.17.06.2019ன்படி மேற்கண்ட பிரேரணைகள் 61 நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 90 நபர்களுக்கு அனுமதி கோரும் பிரேரணை பரிசீலனையில் உள்ளதால் சுகாதார பணிகள் பாதிக்கப்படாமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர். எஸ்.எஸ். இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 91 நபர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தத் தொகையிலேயே 01.05.2020 முதல் 31.07.2020 வரை 3 மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 494/2020/எச்1 |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2019 –2020ம் ஆண்டு ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர் –2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.350/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.05.2020 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.19,00,150/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1688/2016/எச்1 |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 28ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காந்திபுரம் பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தில் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1704/2020/இ1 |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள கெண்டையூர் பகுதியில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இக்கழிப்பிடத்திற்கு போதுமான தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கவும், மேலும் கழிப்பிடத்திற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1704/2020/இ1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த்திட்டங்களில் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்க குளோரின்வாயு (Liquid chlorine) பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கையிருப்பில் சிலிண்டர்கள் குறைவாக இருப்பதாலும், இனிவரும் மழைக்காலங்களில் கூடுதலாக குளோரின் வாயு தேவைப்படுவதாலும் தற்போது நான்கு சிலிண்டர்கள் கையிருப்பில் உள்ளதை நிரப்பவும், ஒரு ஆண்டிற்கு (2020–2021) தேவைக் கேற்ப வாங்கவும், சிலிண்டர்கள் ஆய்வு செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1478/2020/இ1 |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 23ல் உள்ள மகாதேவபுரம் பிரதான சாலையில் உள்ள விநாயகர் கோவில் அருகில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்ல மிகுந்த இடையூறாக உள்ளது. இதனால், இங்குள்ள சிறுபாலத்தினை புதுப்பிக்க ரூ. 2.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1632/2020/இ1 |

| | |
|---|---|
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள மணிநகர் உயர்நிலைப்பள்ளியில் உள்ள கழிவறையில் போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் கழிவறைக்கு பிரதான தண்ணீர் குழாய்கள் அமைக்கவும் மற்றும் பள்ளி வகுப்பறைகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 4.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1634/2020/இ1 |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக பேட்டரி மூலம் இயங்க கூடிய வாகனங்கள் 32 எண்ணிக்கை வாங்கப்பட்டது. இவ்வாகனங்களில் வருடாந்திர பராமரிப்புக்காக ரூ.7.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் |
| 18 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தூய்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 2015 –2016 ஆம் ஆண்டு – 5 வாகனங்களும், 2017 – 18ஆம் ஆண்டு – 12 வாகனங்களும் மற்றும் 2018 – 19 ஆம் ஆண்டு நிதியின் மூலம் – 15 வாகனங்களும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.<br><br>இவ்வாகனங்கள் அனைத்தும் Battery மூலம் இயங்குகின்ற வாகனங்கள், இவ்வாகனங்கள் பொருத்தப்பட்டு இருக்கும் Batterys மற்றும் இதர உபகரணங்களில் பழுது ஏற்பட்டால் அதனை உடனுக்குடன் சரி செய்யும் விதமாக 32 வாகனங்களுக்கும் ஒரு வருடத்திற்கு பராமரிக்க ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஆணையாளர் அவர்கள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1638/2020/இ1 |
| 19 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி மற்றும் கல்விநிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 16.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததார் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | பொதுநிதி 2019 – 20<br>வார்டு எண். 17 குமரபுரம் பகுதியில் உள்ள பொதுகழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்தல் | ரூ.0.80/– இலட்சம் | ஸ்ரீசக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 2.87% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | கல்வி நிதி 2019 –20<br>வார்டு எண். 5 வள்ளுவர் நகரவைத் தொடக்கப்பள்ளியின் முதல் தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டுதல் | ரூ.7.00/– இலட்சம் | ஸ்ரீசக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 5.27% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் இரண்டு பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 1643/2013/இ1

20 மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள பகுதிகளில் COVID –19 தொற்று நோய் பரவி வருவதை தடுக்கும் விதமாக தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட நபர்கள் வசிக்கும் பகுதிகளை மாநில அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் அப்பகுதிகளில் Containment Zone ஆக அறிவிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதிகளை மக்கள் நடமாடுவதை தடுக்கும் வகையில் தடைசெய்ய வேண்டியுள்ளது. இதற்காக சாலைகளில் இருபுறமும் தடுப்புகளுடன் கூடிய கதவுகள் அமைத்து தடைசெய்யப்பட்ட பகுதிகளில் மக்கள் நடமாடுவதை தடுத்து பரவும் அபாயத்தை தடுக்க வேண்டியுள்ளது. மேலும் மக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் நோய் தொற்று பரவுவதை தடுக்க பேருந்து நிலையங்கள் மற்றும் சில பகுதிகளில் தடுப்புகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகள் அனைத்தும் பேரிடர் மற்றும் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பணிகள் என்பதாலும் இப்பணிக்கு ரூ.1.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணிகள் அவசரஅவசிய பணிகள் என்பதால் இப்பணிகளை நகராட்சி சட்டம் 1920 விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கு உண்டான செலவினம் ரூ.1,69,948/– ஐ மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1480/2020/இ1

21 மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் நீரேற்று நிலையத்தில் உள்ள 15Hp , 25Hp, 60 Hp, 125 Hp, பம்பின் பழுதுகள் அகற்று இயக்கிக் கொடுக்கவும் தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான குளோரின் டியூப் மற்றும் வால்வின் பழுதுகள் அகற்றிக் கொடுக்கவும் , தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான உதிரிச்சாமான்கள் விநியோகம் செய்யவும் 09.04.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 28.04.2020ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s . R.V.எலக்ட்ரிக்கல்ஸ், 25, R.R.சாமிலைன், கோயம்புத்தூர் | ரூ.3,10,000/– | ரூ.3,16,162.32 |
| 2 | M/s .அல்கெம் இன்டஸ்ட்ரீஸ் 32ஏ, ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ.3,10,000/– | ரூ.3,09,317.18 |

அலுவலகக் குறிப்பு

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s .அல்கெம் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.01469/2020/இ1

22 மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நிரேற்று நிலையத்திற்குத் தேவையான குளோரின் வாயு சிலிண்டர்களில் நிரப்பி விநியோகம் செய்ய 09.04.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 28.04.2020ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | M/s .அல்கெம் இன்டஸ்ட்ரீஸ்<br>32ஏ, ஊட்டி ரோடு,<br>மேட்டுப்பாளையம். | ரூ.4,50,000/– | ரூ.4,49,458/– |
| 2 | M/s .ஜெனரல் மார்க்கெட்டிங் எண்டர்பிரைசஸ்<br>25,பெரிய பள்ளிவாசல் தெரு,<br>பழனி. | ரூ.4,50,000/– | ரூ.4,61,340/– |

**அலுவலகக் குறிப்பு**

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s .அல்கெம் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.01478/2020/இ1

**23**

மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.15ல் உள்ள பழைய சந்தைக்கடை விநாயகர் கோவில் சிறுமுகை ரோடு பகுதியில் உள்ள சிறுபாலம் மற்றும் கால்வாய் மிகவும பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு விளையும் அபாயம் உள்ளதால் இப்பணியினை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1633/2020/இ1

**24**

மேட்டுப்பாளையம் நகராட்சியில் 30.04.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரின் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | பேருந்துநிலையத்தின் அருகில் உள்ள நீரேற்று நிலையத்தில் (Booster) சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கட்டிடங்கள் பழுது பார்த்தல் | ரூ. 5.00 இலட்சம் | திரு.ஜி.கே.எஸ் சேதுபதி | 497.1% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எம்.வேலுசாமி | 7.56% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.ஜி.கே.எஸ் சேதுபதி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1631/2020/இ1